பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**16 06 2026** **06 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஃபிரான்ஸ் நாட்டின் **Evian** நகரில் நடைபெறும் **G-7** உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

2. உலகில் படைப்பாற்றல் மற்றும் பொழுதுபோக்குத் துறையில் இந்தியா வளர்ச்சியடைந்து வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

3. மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்குவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்காற்றுவதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

4. பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்க மாநில அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. மு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

5. லண்டன் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஃபிரான்ஸ் நாட்டின் **Evian** நகரில் நடைபெற்று வரும் **G-7** உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

“புதிய கூட்டாண்மைகளை உருவாக்குதல், சர்வதேச ஒற்றுமையை மீண்டும் கட்டமைத்தல்” என்ற தலைப்பில் நடைபெறும் அமர்வில் அவர் பங்கேற்க உள்ளார்.

இதில் **G-7** நாடுகளின் தலைவர்கள், கூட்டாண்மை நாடுகளின் தலைவர்கள், உலக வங்கி மற்றும் ஆப்பிரிக்க வளர்ச்சி வங்கிப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இம்மாநாட்டிற்கு இடையே கனடா, பிரிட்டன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் இருதரப்பு பேச்சு நடத்த உள்ளார்.

அதைத் தொடர்ந்து பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன் அளிக்கும் விருந்திலும் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

**G-7** உச்சிமாநாட்டில் உலகில் நிலவும் சமநிலையின்மை, புவி அரசியல் நெருக்கடிகள், குழந்தைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது உள்ளிட்டவை குறித்து தலைவர்கள் விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

உலகில் படைப்பாற்றல் மற்றும் பொழுதுபோக்குத் துறையில் இந்தியா வளர்ச்சியடைந்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

ஆவணப்படங்கள், குறும்படங்கள், அனிமேஷன் படங்களுக்கான சர்வதேச திரைப்பட விழாவை மும்பையில் நேற்று அவர் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

கதை சொல்லல், படைப்பாற்றல் தொழில் முனைவு ஆகியவற்றுக்கான உலகளாவிய மையமாக இந்தியா உருவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நமது நாட்டின் திரைப்பட மற்றும் ஆவணப்பட கதைகள், உலக அளவில் பார்வையாளர்களை ஈர்க்கும் திறனைக் கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

அதேபோல் படைப்பாற்றல் மிக்க திறமையாளர்களின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத் துறை கடந்த ஆண்டு 9 சதவீதம் வளர்ச்சி பெற்றதாக அவர் கூறினார்.

டிஜிட்டல் ஊடகம் இத்துறையில் மிகப்பெரிய பிரிவாக உருவெடுத்து முதல் முறையாக ஒரு லட்சம் கோடி ரூபாய் வருவாயைக் கடந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மட்டும் இந்தியாவில் ஆயிரத்து தொள்ளாயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்கள் வெளியிடப்பட்டதாகவும், அதன்மூலம் திரையரங்கு வருவாய் 16 சதவீதம் அளவிற்கு உயர்ந்ததாகவும் திரு. எல். முருகன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்குவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த நிதியாண்டில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி உரையாற்றினார்.

ஒவ்வொரு மாணவரையும், சமூகப் பொறுப்புள்ளவர்களாக மாற்ற வேண்டியது நமது கடமை என்று அவர் கூறினார்.

கல்விக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் செயல்படுத்த மாநில அரசு தயாராக இருப்பதாக திரு. அருண்ராஜ் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பால்வளத்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி, வணிகவரித்துறை அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் ஆகியோரும் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

பெண்கள் மற்றும் சிறு குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. மு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து மயிலாடுதுறையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்தகைய குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளை எந்த சமரசமும் இன்றி சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும் என்று கூறினார்.

இதுதொடர்பான விழிப்புணர்வு இயக்கங்களும் தீவிரப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

மேகதாது அணை விவகாரத்தில் மாநில அரசின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது என்று அவர் கூறினார்.

காவிரியின் குறுக்கே அணைகட்டும் முயற்சியை தடுக்க மாநில அரசு உறுதியுடன் செயல்பட வேண்டும் என்றும் திரு. வீரபாண்டியன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

சேலம் மற்றும் தருமபுரி மாவட்ட மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் தொப்பூர் மலைப்பாதை உயர் பாதுகாப்பு மிக்க சிறப்பு வழித்தடமாக மாற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இப்பணிகள் 41 சதவீதம் முடிவடைந்த நிலையில், திட்டமிட்டபடி 2028ஆம் ஆண்டு மார்ச் மாதம் அனைத்துப் பணிகளும் நிறைவடையும் என்றும், இதன் மூலம் அப்பகுதியில் விபத்துகள் குறையும் என்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீனிவாசலு எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Voice Byte — Srinivasalu — 25 Sec)**

<<<<>>>>

மாணவர்கள் உயர்கல்வியில் சேர்வதை ஊக்குவிக்கும் வகையில் சேர்க்கை வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மையம் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் செயல்பட்டு வருகிறது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அனைத்து மாணவர்களும் தங்களது உயர்கல்வியை தொடருமாறு தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. சரவணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Voice Byte - Collector — 40 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில் நாமக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்களிலும் மிதமான மழை பெய்யும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

தேனி மாவட்டத்தில் பலத்த காற்றுடன் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்கா - ஈரான் இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் முறைப்படி ஸ்விட்சர்லாந்தின் ஜெனிவாவில் வரும் 19ஆம் தேதி கையெழுத்தாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

பங்களாதேஷில் தட்டம்மை நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 656ஆக அதிகரித்துள்ளது.

-------------

நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியான வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 3 பேரை சிறையில் விசாரிக்க சிபிஐ விடுத்த கோரிக்கைக்கு தில்லி நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

-------------

சர்வதேச யோகா தினத்திற்கான முன்னோட்ட நிகழ்ச்சி புதுதில்லியில் மத்திய இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தலைமையில் நடைபெற்றது.

-------------

குடிமைப் பணிக்கான முதல்நிலை தேர்வு முடிவுகளை மத்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது.

-------------

ஊரக வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக புகார்கள் இருந்தால் உரிய விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துறை செயலாளர்களுக்கு அமைச்சர் திரு. ஆனந்த் அறிவுறுத்தியுள்ளார்.

-------------

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள், மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து அரசு அலுவலர்களுடன் அமைச்சர் திருமதி விஜயலட்சுமி ஆலோசனை மேற்கொண்டார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் முதியோர் வன்கொடுமை ஒழிப்பு உறுதிமொழியை ஆட்சியர் திரு. ரவிக்குமார் தலைமையில் அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

-------------

தமிழகத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களில் நடப்பாண்டு நேரடி சேர்க்கைக்கான கால அவகாசம் இம்மாதம் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

லண்டனில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-4, 7-5 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் Alex De Minaur - பிரிட்டனின் Cameron Norrie இணையை வென்றது.

------------

உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் - **Cape Verde** அணிகளுக்கு இடையேயான ஆட்டம் கோலின்றி டிராவில் முடிந்தது.

**<<<The End>>>>**